# DEPOSITION OF WITNESS
## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 167/2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : தங்கமணி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.08.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் சூலபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு எங்கள் ஊர் அரசு தரப்பு சாட்சிகளை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 10.00 மணியளவில் நான் தோட்டத்திற்கு மாடு மேய்ச்சலுக்கு செல்வதற்காக நான் குன்னுமார்பட்டி ரோட்டில் நடந்து சென்றுகொண்டிருந்த போது என்னுடைய அழுக்கு துணிகளையும் துவைப்பதற்காக எடுத்து சென்று கொண்டிருந்தேன். அப்போது எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் ஒருவர் என்னிடம் அவரது வாகனத்தை நிறுத்தி நானும் பாண்டியப்பன் கோவிலுக்கு தான் சென்றுகொண்டு இருக்கிறேன், எனது வாகனத்தில் ஏறிக்கொள்ளுங்கள் நான் உங்களை இறக்கிவிடுகிறேன் என்று சொன்னதன்பேரில் நானும் அவரது பைக்கில் பின்னால் அமர்ந்து ஒரு கி.மீ துாரம் வரை சென்றேன். பின்பு அந்த நபரான எதிரி தனது வண்டியில் பெட்ரோல் இல்லை என்று சொல்லி இறக்கிவிட்டார். நானும் சரியென்று சொல்லி இறங்கி சென்றேன். நான் நடந்து கொண்டிருக்கும் போது எதிரி எனக்கு பின்னால் இருந்து எனது கழுத்தில் இருந்த 3 பவுன் தங்க செயினை அத்துக்கொண்டு அவரது வண்டியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்.

2. நான் அழுதுகொண்டிருந்தேன், அப்போது மேற்கிலிருந்து இருசக்கர வாகனத்தில் வந்த கொழுந்தன் மகாலிங்கம் என்னவென்று கேட்டார். நான் நடந்த விபரத்தை அவரிடம் சொன்னேன். பக்கத்தில் அங்கும் இங்கும் ஓடி தேடினேன், விசாரித்தேன். பின்பு நான் சாட்சி மகாலிங்கத்துடன் காவல் நிலையம் சென்று புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார்வாக்குமூலம் அசா.ஆ.1 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது)** இரண்டு மாதங்கள் கழித்து காவல் நிலையத்தில் எனது செயின் கிடைத்துவிட்டதாக சொல்லி வரச்சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்று எனது நகையையும், அங்கிருந்த எதிரியையும் அடையாளம் காட்டினேன். பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து நான் எனது நகையை திரும்ப பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள என்னுடையது தான். (**அந்த புகைப்படம்(எண்ணம்-2) அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எதிரியை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டஇயலும்.

**(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**